கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:24.05.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக தேனீ தினம் - 2024**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கும் வேளாண் பூச்சியியல் துறை சார்பாக உலக தேனீ தினமானது மே 20, 2024 (திங்கட்கிழமை) அன்று கொண்டாடப்பட்டது. இவ்வாண்டில் ‘‘தேனீக்களின் வாழ்வியலில் இளைஞர்களின் ஈடுபாடு’’ எனும் கருப்பொருளினை உள்ளடக்கி உலகமனைத்தும் கொண்டாடியுள்ளது சாலச்சிறந்தது. இதன் ஒரு பகுதியாக பள்ளிக்குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான பல்வேறு போட்டிகள் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்றனர். அவர்களை பூச்சியியல் துறையின் தேனீ வளர்ப்பகத்திற்கு அழைத்து சென்று தேனீக்களின் வகைகள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது. தொடர்ந்து படம் வரைதல், கைவினைப் பொருட்கள் செய்தல், தேனீ கூடு மாதிரி செய்தல், மதுரம், மகரந்தம் மற்றும் தேன் சேகரித்தல் போன்ற பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் தலைமை தாங்கினார். அவர்கள், முதலாவதாக தானியங்கி அடை அஸ்திவாரத்தாள் தயாரிக்கும் இயந்திரத்தினை துவக்கி வைத்து மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். இதனைத் தொடர்ந்து தேனீ வளர்ப்பாளர்கள் அமைத்திருந்த தேனீப்பொருட்கள் கொண்ட கண்காட்சியைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடினார். துணைவேந்தர் அவர்கள் தலைமையுரையாற்றும் பொழுது தேனீக்களின் வாழ்வியலும், தேனீ தரும் சத்தான பொருட்கள் மற்றும் அவற்றினால் பயிர்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும் மாணவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தார்.

அடுத்ததாக, பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர், முனைவர்.மூ.சாந்தி அவர்கள் விவசாயத்தில் தேனீக்களின் பங்கு மற்றும் மகரந்தச் சேர்க்கையின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர், முனைவர். வெ. பாலசுப்பிரமணி மற்றும் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குனர், முனைவர்.இ.சோமசுந்தரம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகைத் தந்த தேனீ வளர்ப்பாளர்கள் தேனீ வளர்ப்பில் சந்தித்த சவால்கள், சாதனைகள் மற்றும் அனுபவங்களை அனைவரிடமும் பகிர்ந்து கொண்டனர். மாணவர்கள் இந்நிகழ்ச்சியின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தை ஆர்வமுடன் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு துணைவேந்தர் அவர்கள் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பலதரப்பட்ட வயதுடைய மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், தேனீ வளர்ப்பாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் பூச்சியியல் துறையின் மாணவர்கள் கலந்துக்கொண்டனர். முனைவர். வா. ரா. சாமிநாதன், முனைவர்.ஞா.ப்ரீதா, முனைவர்.வ.பாஸ்கரன் மற்றும் துறைப் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் விழா அமைப்புகளையும், போட்டிகளையும் முன்னின்று நடத்தினர். இந்நிகழ்ச்சியில் வேளாண் பூச்சியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் மா. முருகன் அவர்கள் விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார். இறுதியாக, முனைவர் ம.ரா.சீனிவாசன் (பேராசிரியர், வேளாண் பூச்சியியல்) அவர்கள் நன்றியுரை வழங்கினார். விழாவில் சுமார் 300 பேர் பங்கேற்றனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**